(2) 1980 ஆம் ஆண்டு நிலம் கையகப் படுத்துதல் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 21/1980).

(3) தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 29/1980).

(4) தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் (திருத்தம்–சிறப்பு விதித் துறைகள்) திருத்த சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 25/1980).

வேறு அரசு அலுவல்கள் ஏதேனும் இருப்பின் அவை எடுத்துக்கொள்ளப்படும்.

10—8—1980 (ஞாயிற்றுக் கிழமை) — விடுமுறை

11—8—1980 (திங்கட் கிழமை)
12—8—1980 (செவ்வாய்க் கிழமை) — தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1980-81 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையின் மீதும் மற்றும் 1979-80 ஆம் ஆண்டிற்கான துணை நிதி நிலை அறிக்கையின் மீதும் விவாதம்.

குறிப்பிட்ட தேதிகளின் சட்ட முன்வடிவுகள் ஆய்வு செய்து நிறைவேற்ற முடியாத நிலை இருப்பின், அச்சட்ட முன்வடிவுகள் மறுநாள் அவையில் முன்னுரிமை கொடுத்து எடுத்துக் கொள்ளப்படும்.

(உ) அலுவல் ஆய்வுக் குழுவிற்கு நியமனம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு மற்றுமோர் அறிவிப்பு.

பேரவையின் 256 (1)-வது விதியின்கீழ் திரு. நா. சுந்தரராஜ் அவர்களை அலுவல் ஆய்வுக் குழுவின் உறுப்பினராக நியமனம் செய்கிறேன்.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை மறுநாள் (28—7—1980) காலை 9.00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-48 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.